**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC** 184/2016 |
| Prosecution Witness | : | அ.சா.4 |
| Name | : | சரவணன் |
| Father's/Husband Name: | : | துரை |
| Address : | : | கீழக்கரை, எசனை, பெரம்பலூர்<br>Now at 174/T5, துறைமங்களம், பெரம்பலூர் |
| Age | : | 44/2023 |

தேதி: 27/11/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது( **எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மேட்டூர் டிரான்போர்ட் என்ற நிறுவனத்தை பிரான்சாய்ஸ் எடுத்து நடத்தி வருகிறேன். எனது அக்கா மகனின் பெயர் பிரதீப். அவர் பி.ஈ. படித்துள்ளார். அவரது நண்பரின் பெயர் பூபாலன். கடந்த 2014 ம் ஆண்டு பூபாலன் வெளிநாடு சென்றுவிட்டு வந்துள்ளார். அதனால் எனது அக்கா மகனும் வெளிநாடு செல்ல வேண்டும் என பூபாலனிடம் 14/07/2014 அன்று கூறி விசாரணை செய்துள்ளார். அதற்கு பூபாலன் நீடாமங்களத்தை சேர்ந்த கலைமணி என்பவர் வெளிநாடு செல்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும்,

CNR

அதற்கு நான்கு லட்சம் செலுத்த வேண்டும் என கூறியுள்ளார். அதனால் பிரதீப் ரூ.1 லட்சத்தை முன் தவணையாக வங்கி கணக்கு மூலம் செலுத்தியுள்ளார். செலுத்திய ஒரு வாரத்தில் விசா வந்துவிடும் என கலைமணி கூறியுள்ளார். ஒரு வாரம் கழித்து நாங்கள் கேட்டபோது மீதி மூன்று லட்சத்தை செலுத்த வேண்டுமென கூறினார். அதனால் நானும் எனது மாமா சுப்ரமணியன் மற்றும் பிரதீப் ஆகியோர் சென்று ரூபாய் 10 ஆயிரம் குறைத்துக்கொள்ளும்படி கூறி ரூபாய் 2 லட்சத்து 90 ஆயிரத்தை ரொக்கமாக செலுத்தினோம். ஆக மொத்தம் நாங்கள் ரூ.3,90,000/- யை கலைமணிக்கு செலுத்தியுள்ளோம். 10 நாட்களுக்குள் பிரதீப்பின் மெயில் அய்டிக்கு ஒரு டிக்கெட் வந்தது. ஆனால் அந்த டிக்கெட் போலியானது என நாங்கள் தெரிந்து கொண்டோம். மீண்டும் நாங்கள் மூவரும் சென்று கலைமணியை சந்தித்தோம். அப்போது, ராஜமாணிக்கம் என்பவரிடம் கலந்து பேசிவிட்டு பதில் அளிப்பதாக கலைமணி கூறினார். பின்பு போன் மூலமாக என்ன ஆச்சு என கேட்டபோது, விசா வந்துவிடும் என காலதாமதபடுத்தினார். ஆனால் அதன்படி வரவில்லை. மீண்டும் நாங்கள் கேட்ட போது, ஒரு பத்திரத்தில் எழுதிக்கொடுத்து 6 மாத கால அவகாசம் வேண்டும் என அவரின் ஊர்க்காரர்கள் சாந்தகுமார் மற்றும் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் கேட்டார். மீண்டும் நேரில் சென்று கேட்டபோது, அவரால் முடியாது எனவும், வேண்டுமென்றால் நீதிமன்றத்திற்கு சென்று பார்த்துக்கொள்ளுங்கள் என கூறிவிட்டார். அதனால் நாங்கள் மூவரும் பெரம்பலூர் காவல்

கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். அதன் அடிப்படையில் பெரம்பலூர் குற்ற பிரிவினர் 30/06/2015 அன்று என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

*sd/-*
Judicial Magistrate No.I,
Perambalur.

VM-Public